
ஸ்ரீ

திருப்பதித் திருப்புகழ்



Acc. 14100
Q 22

இயற்றியவர் :

அருட்கவிமணி
திருப்புகழ்க் கலாசிகாமணி

காமாக்ஷி தாஸர்

34, அருண்டேல் தெரு, மயிலாப்பூர், சென்னை-4

பிரசுரித்தோர் குறிப்பு

---- ೧ ----

இந்நூலாசிரியர் முருகனாலும், தேவியாலும் வலியவந்து ஆட்கொள்ளப்பட்ட பெரிய மகான். ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஆஞ்சநேயர் அருளையும் பெற்றவர். இவரை ஒரு மகரிஷி மகாத்மா என்றால் மிகையாகாது. தேவியின் அருள் பெற்றவர் என்று காஞ்சி காமகோடி பெரியவாளும், ரமண மகரிஷிகள், சுத்தானந்த பார்தி முதலியோராலும் மதிக்கப்பட்டவர். இவரை இராமகிருஷ்ண பரமஹம்ஸர், அரவிந்தர், ரமண மகரிஷிகள், அபிராமி பட்டர், அருணகிரி இவர்களோடு இணைத்து "**Modern living Saint**" என்று யோகி ராமையா சுத்தானந்த பாரதி முதலியோராலும் கூறப்பட்டவர். சுவாமி சிவானந்தா இவரை "**Beloved immortal Bhagwan**" என்றே கூறியுள்ளார். இவர் அநேக பக்தி நூல்களும், தத்துவ நூல்களும் இயற்றியுள்ளார்; தமிழிலும், ஆங்கிலத்திலும் ஸ்ரீமத் பகவத் கீதையை பாடல் ரூபமாக மொழி பெயர்த்துள்ளார். உபநிடதங்களுக்கு உரை எழுதியுள்ளார். பகுத்தறிவு, உபநிடதம், விஞ்ஞானம் இவைகளுக்கு ஒத்த சத்திய அத்வைதத்தை ஸ்தாபித்துள்ளார். இவருடைய காமாக்ஷி திருப்புகழ் இந்தியா முழுவதிலும் உள்ள தேவி பக்தர்களால் பாராயணம் செய்யப்பட்டு இப்பொழுது 4-ம் பதிப்பில் இருக்கிறது. இவர் பூஜை செய்யும் காமாக்ஷி தேவி மிகவும் சக்தி வாய்ந்தவள். இவருடைய பௌர்ணமி பூஜை கண் கொள்ளாக் காட்சி. இவருடைய குங்கும பிரஸாதத்தினால் சகல இன்னல்களும் தீர்ந்து விடுகின்றன. முன் இவருடைய தமிழ், ஆங்கில கீதைகளை பிரசுரித்தோம். இப்பொழுது இதை பிரசுரிக்கிறோம்.

இதை இலவசமாக அச்சிட்டு வழங்கிய தனவந்தருக்கு எங்களது நன்றி.

4-2 9

உ

திருப்பதித் திருப்புகழ்

வெங்கடேசாஷ்டகம், சுப்ரபாதம், தோத்திரம், பிரபத்தி
மங்களா சாஸனம், பஜகோவிந்தம், திருப்புகழ்,
பார்த்தசாரதி பஞ்சரத்னம்
முதலியன அடங்கியது

ILOOR ANDAVA
A. No. 14080
LIBRARY, KOVILO

ooo

இயற்றியவர் :
அருட்கவிமணி **காமாக்ஷி தாஸர்**
34, அருண்டேல் தெரு, மயிலாப்பூர், சென்னை-4

ACCNo: 14100
a 4173

பிரசுரித்தோர் :
SACRED WORKS PUBLICATION COMMITTEE
54, அடஞ்சான் தெரு, மந்தைவெளி,
சென்னை - 28

காபிரைட் இயற்றியவருக்கே] 1980 [இலவச வெளியீடு

நூன் முகம்

திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் தெய்வத்தின் மகிமையைப் பற்றி அறியாதார் நமது நாட்டில் இல்லை என்றே கூறலாம். இந்தியாவின் பல பாகங்களினின்றும் கோடிக்கணக்கான மக்கள் திருவேங்கடனைத் தொழுது அருள் பெறுகின்றனர். இவ்வாறு அருளே யுருவாய் நின்ற தெய்வத்தை, சிவன் என்பதா தேவி என்பதா, முருகன் என்பதா நாராயணன் என்பதா. எல்லா சமயத்தினரும் வழிபடுகிறார்கள். கோரிக்கைகளும் நிறை வேறப் பெறுகின்றனர்.

இப்படிப்பட்ட மகிமை வாய்ந்த தெய்வத்தை வாயாரப் பாடி வழிபட தமிழ் மக்களுக்கு தமிழில் தோத்திரங்கள் இருக்க வேண்டிய அவசியத்தை முன்னிட்டு திருவேங்கடன் அருளால் இந்த திருப்புகழை ஆக்கியுள்ளேன். இதில் சுப்ரபாதம், தோத்திரம், பிரபத்தி மங்களா சாஸனம் பஜகோவிந்தம் இவைகளின் மொழி பெயர்ப்பும், வெங்கடேசாஷ்டகம் பார்த்த சாரதி பஞ்சரத்னம், திருப்புகழ் பாடல்களும், போற்றி, வாழ்த்து முதலியவைகளும் உள்ளன.

இதனைப் பாராயணம் செய்பவர்களுக்கும் இதை இலவசமாக அச்சிட்டு வழங்கிய தனவந்தருக்கும் திருவேங்கடன் அருள் பூரணமாக உண்டாகும்.

15-8-80

இப்படிக்கு
காமாக்ஷி தாஸர்

4-2

I

ஸ்ரீ வெங்கடேசாஷ்டகம்

ஓம் நமோ நாராயணு வென்று தினமான
முன்னியடி போற்றும் அடியார்
உள்ளந்த னிற்கருணை வெள்ளந் தனைப்பொழியும்
ஒப்பற்ற கேரவிந்தனும்
வானமோ ரடியாக புவனமோ ரடியாக
மற்றுமோ ரடிவேண்டியே
மாபலியின் முடிமீது சீர்பாதம் வைத்தருள
மாவடிவ முற்ற பெருமாள்,
கானமே வித்தந்தை சொற்காக்கு மாமாயன்
கார்முகி லரங்கநாதன்
கருடகேதனன் சுருதி யுடைய கேசவன் கமல
கண்ணனெரு கோபாலனும்,
மீனலோசனியாகு மலர்மேலுமங்கை தோள்
மேவுமணவாள பெருமான்
மேலான மெய்ப்பதி திருப்பதி யுறைந்தருளும்
வெங்கடேசத் தெய்வமே. (1)

நவநீதமுந்திருடி யுரலோடு கட்டுண்ட
நளினமிகு நாராயணன்,
நாலுவே தங்கள்புகழ் மாலுமோர் பங்கயனை
நாபியிடை வைத்த நாதன்,
அவமாயை கொண்டிளைய மதலையை வருத்திட்ட
மமதைமிகு மிரணியன் பால்
ஆராத காரமொடு நரசிம்மமாகியவன்
மார்பைப் பிளந்த மாயன்
பவநோய் களைந்தெனது பகையினை யறிந்தரிய
பலநிதி யுவந்தருளு மோர்

பக்தபரி பாலனொரு பாலகோபாலனும்,
பச்சைநிற பூபாலனும்,
எவைகோரி லவையீயு மதிசயம நேகமுள
மெய்ப்பதி திருப்பதியில் வாழ்
எம்பிரா னிமையவர்கள் தம்பிரான் ஈடற்ற
வெங்கடேசத் தெய்வமே. (2)

மோகினியின் வடிவமுற் றமரருக் கமுதருளு
மொப்பற்ற கோவிந்தனும்,
மூவடிகள் கேட்டன்று விச்வரூபங் கொண்ட
முகுந்த மாதவ வாமனன்,
மேகநிற வண்ணனதி மாயமுள கண்ணனொரு
வேணுகானப் ரியனுமாம்
விமலனெமை யாளுமொரு ராஜகோ பாலனும்
வேதங்கள் புகழ் சீலனும்,
தேகமுழு துந்தெரிய மானபங்கம் புரிய
தீயவெண்ணங் கொண்டவத்
தீமைமிகு துரியோதனன் மங்கை த்ரௌபதியின்
சேலைமுழுதுங் களையு முன்
வேகமென வந்துதவு நாரணனு மெய்யடியர்
மான சம்ரக்ஷ கனுமாம்
எந்தை திருவேங்கடந் தன்னிலுறை யெம்பிரான்
ப்ரத்யக்ஷ பரதெய்வமே. (3)

நாமகிரி யம்மையொடு நளினமொ டெழுந்தருளும்
நரஸிம்ம மான பெருமாள்
நாரணன் மாதவன் ஸ்ரீதரன் கேசவன்
நந்தகோபால மாயன்
மாமயிலி லேறும் வடிவேல்லவர் தமக்கினிய
மாமனெனு மதுசூதனும்,
மறையோனின் மாதாதை மன்மதன் தந்தையும்
மதிவதன ரகுராமனும்,

காமகலை யோடந்த காமபீடத்தி லொளிர்
    காமாக்ஷி மாதேவியின்
கருணைமிகு மண்ணனும் கரியமுகில் வண்ணனும்
    கள்ளமிகு செங்கண்ணனும்,
தீமைதரு காளிங்கனைத் தனது]`தாள்கொண்டு
    தீரநர்த்தன மிட்டதோர்
சீலனது கூலனெழிலானதிரு வேங்கடனும்
    சீர்மேவு கோவிந்தனே. (4)

ராம ராமா ராமராம ராமராாம
    ரரம ராமா வென்றுமே
ரமித்திடு மனத்திடை யுதித்தன வளித்திடும்
    அரிதான ரகுநாயகன்,
கோமளாங் கித்தேவி சீதையேந்திப் போன
    கொடிய ராவணனுடைவன்
குலந்தனை யரிந்திட விலங்கையு மழிந்திட
    கோதண்டமே பூண்டவன்.
காமனே கண்டுமிக நாணுமோர் சுந்தரன்
    கஞ்சிவாழ் வரதராஜன்
கஞ்சமலர் செங்கணன் கண்ணன் க்ருபாகரனும்
    கார்போலு மாலோனுமாம்,
தீமையா வுந்தீர திவ்யமங்கள மருளும்
    மெய்ப்பதி திருப்பதியில்வாழ்
திருபூண்டிடுங் கருணை நிறைவேங்கடன் பெரிய
    திருவேங்கடத் தெய்வமே. (5)

யந்திரமு மந்திரமி முலகிலுள தந்திரமும்
    தாண்டியுள மாமாயனும்
யாசித்து நேசித்து பூசித்து வாசித்து
    யானற்று எனதற்றுமே,
இந்திரியச் சலிவற்று என்றுமவர் சரணுற்று
    இடைவிடா தேத்தும் அடியார்

எவைகோரி லவையீயும் கருணுகரக் கடவுள்
எந்தைமா கோவிந்தனும்,
தந்தியொன் றந்தநாள் ஆதிமூலாவென்று
சங்கடங் கொண்டலறவே
சங்கு சக்கிர மோடு நொடிதனில் வந்தபயந்
தந்தருளி நின்ற பெருமான்,
எந்தவித நோயினையும் எந்தவித விடர்களையும்
இமைப் பொழுதில் நீக்குமாயன்
எந்தநேரந் தனிலும் வந்தடியர் குறைதீர்க்கும்
திருவேங்கடத் தெய்வமே. (6)

நாராயணுவென்று பேராயிரங் கொண்டு
நாளுமடி போற்றும் அடியார்
நலம் பெறவும் இகபரசுகம் பெறவும் செல்வமொடு
ஞானமும் பெற்றுய்யவே,
சீராகவே வைக்கும் மாமாயன் கோபாலன்
செல்விதனை மார்பில் வைத்தோன்
தேவி மீனுக்ஷியின் சீர்மிகுஞ் சோதரன்
சீரங்கனுன பெருமான்,
ஆராத காதலுட னலர்மேலு மங்கையுடன்
அடலுடனே வீற்றிருக்கும்
அதிசய மனேகமுள மெய்ப்பதி திருப்பதியில்
எழுந்தருளி நின்ற பெருமான்,
தீராத வினையெலாம் தீரவே வேண்டுவோர்
தீவினைகள் தீரவைக்குந்
தெய்வமுங் கலியினில் பிரத்யக்ஷ மாய்நின்ற
திருவேங்கடத் தெய்வமே. (7)

யதுகுலத் திலகனுய் அந்தணர் குலத்தனுய்
யாதவர் குலத்தோனுமாய்
ஆதியிற் கூர்மமாய் மச்சமாய்க் கோடுடைய
வராகமா மூர்த்தியாகி,

மதிமிகும் புத்தனுய்த் திரிவிக்ரம மூர்த்தியாய்
மாண்புடை பலராமனுய்
மதியிலா விரணியன் மார்பைப் பிளந்திடும்
உக்ரமிகு நரசிம்மமாய்,
விதியையும் வெல்லவொரு வகையருளும் தெய்வமாம்
மேன்மைமிகு நாராயணன்
மெய்யடிய ருள்ளத்து நின்றவர்கள் மிடிதீர்த்து
செல்வங்கள் பலதந்துமேல்,
பதவிபல தந்தவரை இமையெனக் காத்தருளும்
ப்ரத்யக்ஷ பரதெய்வமாம்
பக்தபரி பாலனனு கூலன்எமை யாளுமோர்
திருவேங்கடத் தெய்வமே. (8)

———o———

II

வேங்கடேச ஸுப்ரபாதம்

தமிழ் மொழி பெயர்ப்பு :

காமாக்ஷி தாஸர்

அந்தநாள் கோசலை அன்புட னீன்றருள்
அருமைப் புதல்வனே யாகுமி ராமனே
இந்த நரர்க்கெலாம் புங்கவ ஞவோனே
இங்குப் பொழுதுமே சீராய்ப் புலர்ந்தது;
சந்தியில் வந்தனம் நித்யகர் மாக்களும்
சரதிக்க வேண்டுமால் தேவர்க்கு நாங்களும்
இந்தக் குளிர்காலை தன்னிற் றுயிலொழிந்
தெந்தையே நீபள்ளி யெழுந்தரு ளாயே.

2

பள்ளி எழுந்தருள் கோவிந்த னேயினி
பள்ளி எழுந்தருள், பள்ளி எழுந்தருள்;
பள்ளி எழுந்தருள் கருடக் கொடியோனே
பள்ளி எழுந்தருள் பதுமையின் காந்தனே;
பள்ளி ஏழுந்தருள் மூவுல கங்கட்கும்
மங்களம் ஓங்கிடப் பள்ளி எழுந்தருள்;
தெள்ளத் துயிலொழிந் திந்தக் குளிர்காலை
தேவனே நீபள்ளி எழுந்தகு ளாயே;

3

அண்டங்கள் யாவையும் ஆக்கிடும் அன்னையே
அந்த மிகுந்திடும் மங்கள ரூபியே;
பண்டை மதுகைட பாளை வதைத்தவன்
பார்புகழ் மார்பினில் வாழுஞ்சீ தேவியே
அண்டிடும் அன்பர் விரும்பும் பொருளெல்லாம்
அள்ளிக் கொடுத்திடும் அம்மை மனேகரீ
புண்ட ரீகன்சீர் வேங்கடன் நாயகி
பொழுதுனக் கிங்குமே நன்றுப் புலரவே.

4

பங்கஜ லோசனி நின்மல நாயகி
பண்புடைப் பூரண மாமதி வதனி
சங்கர னிந்திரன் பங்கயன் மூவரின்
சதிகளு மன்புட னர்ச்சிக்கு மன்னையே
மங்கள மேயவர்க் கீந்தருள் நிதியே
மாண்புள நாரணி இலக்குமித் தாயே
புங்கவன் வேங்கட நாதனின் நாயகி
பொழுதுனக் கிங்குமே நன்குப் புலரவே.

5

அத்திரி முதலெழு விருடியர் பரிவுடன்
அவரவர் சந்தியின் வந்தனை செய்தபின்
பக்தியோ டுன்திருப் பாத மிரண்டுமே
பரவித் தொழுதிங் கருச்சனை செய்திடச்
சுத்த வாகாச கங்கையின் பங்கயத்
தூய மலர்கொண்டு வந்துமே நின்றனர்
சித்திரச் சேட மலைமுடி நாதனே
சீருடன் நீபள்ளி எழுந்தருளாயே.

6

அமரரிற் சீர்பெற்ற ஐந்துமுகத் தரன்
அயனொடு சண்முக னிந்திர னுதியோர்
உமது திருவடி யுலகளந் திட்டதாம்
ஒப்பற்ற லீலைகள் ஓதவே கூடினர்
அமரர் குருவாம் வியாழ பகவானும்
அடங்கிப்பஞ் சாங்கமு மோதியே நின்றனன்
நிமலமாம் சேட மலைமுடி நாதனே
நித்தியனே பள்ளி எழுந்தரு ளாயே,

7

சின்னஞ் சிறுகவே மலருங் கமலமும்
தென்னை யுடன்கமு காதி தருக்களின்
வன்ன மனோகரப் பாளைக ளுந்தரு
மணங்களைத் தாங்கிக் கமழுங் காற்றுமே
சன்னமா யிந்தக் குளிர்காலை தன்னிலே
சாலப் பரிமளம் வீசி நிறைந்தது
பொன்னுடைச் சேட மலைமுடி நாதனே
பூரண மாய்ப் பள்ளி எழுந்தருளாயே.

8

உத்தம மாகிய கூண்டில் உறைந்துமே
உள்ள மகிந்திடப் பண்ணுங் கிள்ளைகள்
மெத்தத்தம் கண்களி ரண்டுந் திறந்தங்கு
மிஞ்சிக் கலங்களில் தங்கிக் கிடந்திடும்
தித்திக்குங் கதலிக் கனியொடு பாயசம்
சீராய்ப் புசித்துக் களித்துனைப் பாடின
சித்திரச் சேட மலைமுடி நாதனே
சீருடன் நீபள்ளி எழுந்தரு ளாயே.

9

கம்பி வுயர்த்தியே கான வினிமையே
காணுமோர் வீணையைக் கையினி லேந்தியே
சம்பிர மாக விரல்களுந் தந்திமேல்
சஞ்சாரஞ் செய்தெழும் மதுர நாதத்தினுல்
இன்பமாய்ப் பூரண மொழிகொண்டு நின்புகழ்
ஏத்தியே பாடினர் நாரதர் இங்ஙனே;
நம்பின பேர்க்கருள் சேட மலையோனே
நன்றென வேபள்ளி எழுந்தரு ளாயே.

10

அருகுளத் தாமரை ஓடைகள் மீதினில்
அலர்ந்த மலர்களின் உள்ளிருந் தேயங்கு
பருகிய செந்தேன் கலந்தே வொலித்திடும்
ரீங்கார நாதங்க ளோடே வெளிவரும்
கருநிற வண்டினம் கண்டு களித்திடக்
கடுகியே நின்னருள் நாடியே வந்தன
பெருமைகொள் சேட மலைமுடிநாதனே
பீடுடனே பள்ளி எழுந்தரு ளாயே.

11

இப்பொழு திங்குள இடையர்கள் சேரியில்
எழுந்துமே ஆயரும் தயிர்கடை கின்றனர்
அப்பொழு தங்கதா லெழுகின்ற சத்தமே
அம்மட் கலங்களில் நிறைந்து மேநிள்றபின்
இப்பெரும் ஒலிதனை ஏற்கப் பொருதங்கு
எட்டுத் திசைகளும் எதிரொலி தந்தன
அப்பனே சேட மலைமுடி நாதனே
அருமையாய் நீபள்ளி எழுந்தரு ளாயே.

12

செங்கதி ரோனருஞ் சேடியர் எனவரும்
செந்தா மரைமலர் சேர்ந்திடும் வண்டினம்
தங்களி னங்கத் தெழிலினு லங்குளத்
தார்நிறக் குவளையி னழகை யிகழ்ந்திட
எங்குமே ரீங்காரத் தீவிர நாதமே
எழுந்திடப் பேரொலி தெய்தன போலும்
மங்களச் சேட மலைமுடி நாதனே
மாண்புட னேபள்ளி எழிந்தரு ளாயே.

13

திருமகள் நாதனே சேவிப்போர் பங்கனே
சீனிவா சன்னனத் திகழும் வரதனே
ஒருமையா முறவாகி உலகெலாம் காத்தருள்
ஒப்புயர் வற்றதோர் கருணைக் கடலோனே
திருமகள் தங்குமோர் உறைவிட மாகிய
திருமார் பெழிலுடைத் திவ்விய மூர்த்தியே
பெருமைகொள் வேங்கட மாமலை நாதனே
பீடுட னேபள்ளி எழுந்தரு ளாயே.

14

சங்கரன் பங்கய னோடு சனந்தனர்
சாலவுஞ் சீர்பெற வேண்டு மனத்தராய்
துங்கநின் புட்கர ணித்துறை நீராடித்
தூய்மையா மங்கமுள் சுத்தரு மாகியே
இங்குநின் சன்னதி முன்னம் வணங்கிடு
திருமுடி கொண்டுனைச் சேவையும் செய்தனர்
மங்களச் சேட மலைமுடி நாதனே
மாண்புட னேபள்ளி எழுந்தரு ளாயே.

15

சங்கர னாதியோர் சாலப் புகழ்கின்றார்
தண்ணெழில் பூண்டநின் மலைகளை என்றுமே
இங்குள சேட மலையொடு வ்ருடமலை
இடப மலையொடு கருட மலையையும்
மங்களத் திருமலை திருவேங் கடமலை
நாரா யணமலை யாவும் புகழ்கின்றார்
பொங்கும் புகழ்மிகு வேங்கட நாதனே
பொலிவுட னேபள்ளி எழுந்தரு ளாயே.

16

அட்டதிக் பாலராம் அரனுட னிந்திரன்
அக்கினி, நைருதீ, இயமன், வருணனும்
திட்டமாய் வாயுவும் சீர்கொள் குபேரனும்
சேவிக்க எண்ணத் தம்கூப்பிய கைகளை
இட்டுச் சிரசின்மே லஞ்சலி செய்வோராய்
இங்ஙன மிப்போது கூடி யிருக்கின்றார்
எட்டுத் திசைபுகழ் வேங்கட நாதனே
எழிலுடன் நீபள்ளி எழுந்தரு ளாயே.

17

உருகியுன் சீர்நடை எழிலினைக் கண்டே
ஒக்கவே தாமுமச் சீரினைப் பெறவே
மிருகவி ராஜனும் பணிக ளிராஜனும்
விண்ணி லுலாவிடும் புள்ளின ராஜனும்
துரக விராஜனும் கரிகளிராஜனும்
சுயநடை தன்னிலே தூய்மை முயன்றனர்
பெருகும் புகழுடை வேங்கட நாதனே
பீடுட னேபள்ளி எழுந்தரு ளாயே.

18

தேவர்கள் பாலும் தம்வல்லமை காட்டவல்
சீருடைச் சூரியன் சந்திரன் செவ்வாயும்
மேவிய புதனுமக் குருவோடு சுக்கிரன்
வீறுடைச் சனியொடு ரகுவும் கேதுவும்
சேவைகள் செய்யுமுன் அடியார்க் கடியார்க்கு
செம்மைகள் செய்யவே சேர்ந்துமுன் நிற்கின்றார்
கோவிற் பெருமைகொள் வேங்கட நாதனே
கோலமாய்ப் பள்ளி எழுந்தரு ளாயே.

19

உன்பாதத் தூளியா லாதித்த ஞதியோர்
உத்தம அங்கங்கள் பெற்று மகிழ்ந்தனர்
உன்பாலே அன்பினுற் சொர்க்கமும் மோக்ஷமும்
ஒன்றுமே வேண்டா மனத்தின ராயினர்
இன்பமாம் நின்சேவைக் கற்பங்கள் வந்துமே
இடர்படு மோவென அஞ்சியே நின்றனர்
அன்பே உருவான வேங்கட நாதனே
அருளுட னேபள்ளி எழுந்தரு ளாயே.

20

பரம பதமான சொர்க்க வழிநின்ருேர்
பகரொணு மோட்ச வழிநின்ற மாந்தரும்
அருமை மிக்கநின் கோபுரச் சிகரத்தின்
அழகுடைக் கலசங்கள் எழிலினைக் கண்டபின்
நரர்மகி ழுலகமே நன்றென மீண்டுமே
நாடி வரவெண்ணம் மேற்கொண்டே நின்ருர்
சுரர்மிகப் போற்றிடும் வேங்கட நாதனே
சுகமாக வேபள்ளி எழுந்தரு ளாயே.

21

திருமகள் நிலமகள் சேவிக்கும் நாதனே
திருவரு ளாதியாம் குணக்கட லோனே
ஒருதனிப் பொருளான தேவர்கள் தேவனே
உலகெலாம் சரண்புகும் ஒப்பற்ற மூர்த்தியே
கருட னுடனுதி சேடன் முதலானோர்
கைதொழு தேத்தும் திருவடிச் செல்வனே
அருளொடு திருநிறை வேங்கட நாதனே
அன்புடனே பள்ளி எழுந்தரு ளாயே.

22

பதும நாபனே பரம புருடனே
வாசு தேவனே வைகுண்ட நாதனே
நிதமுஞ் சரணென நின்னை யடைந்தோர்க்கு
நேய மிகும் பெருங் கற்பக மாவோனே
மதன ஜனார்த்தன சக்கிர பாணியே
மாதவ னேயந்த திருவளர் மார்பனே
இதமருள் திருமலை வேங்கட நாதனே
இப்பொழு தேபள்ளி எழுந்தரு ளாயே.

23

மன்மத னுங்கண்டு நாணு மழகுள
மதன மோகன சுந்தர மூர்த்தியே
பொன்மகள் மார்பெழும் அம்புய மொக்கெனும்
பொற்குடக் கொங்கைகள் நாடிய கண்ணனே
தன்மை மிகும்பல மங்கள நற்குணம்
சார்ந்திடுஞ் சீர்த்திகொள் திவ்விய மூர்த்தியே
பொன்மலை யாகுந் திருமலை நாதனே
பொழுதும் புலர்ந்தது எழுந்தரு ளாயே

24

அன்றுமீன் உருவமாய் ஆகிய அண்ணல்நீ
ஆமையு மாகப்பின் அவதரித் தோனும்நீ
பன்றி யுருவமாய் மானிட சிம்மமாய்
வாமன ரூபனாய்க் கோடரி ராமனாய்
நன்றே ரகுராமனாய்ப் பலரா மனாய்
நலமுரைக் கண்ணனுங் கல்கியு மாவோனே
என்றுந் திருவுடன் வேங்கட முள்ளோனே
எழிலுட னேபள்ளி எழுந்தரு ளாயே.

25

பூரண மாயந்த ஆகாச கங்கையிற்
பொற்குடம் பலவினில் மொண்டிடப் பெற்றுமே
சீருடன் ஏலமி லவங்கமு மிட்டதிற்
செவ்வனே பச்சைக் கற்பூரம் சேர்த்திட்டு
சீர்பெறு தீர்த்தமுஞ் சிரமிசைக் கொண்டுமே
சிரேட்டமாம் வைதீகர் உவகையும் கொண்டனர்.
கோரிய வரமருள் வேங்கட நாதனே
குணமுட னேபள்ளி எழுந்தருளாயே.

26

அருணனும் எழிலுடன் உதயமு மாயினன்
அம்புய மலர்களும் நன்கு மலர்ந்தன
தருணமே புள்ளினம் தங்கள்நா தங்களால்
சம்பிர மாயெட்டுத் திசையும் நிரப்பின
கருணைகொள் உன்றனக் கென்றுமே மங்களம்
கருதிய வைணவர் கோயில்முன் கூடினர்
சரணப் பெருமைகொள் வேங்கட நாதனே
சடுதியில் நீபள்ளி எழுந்தரு ளாயே.

27

பார்புகழ் இருடியர் பலருடன் கூடியே
பங்கயன் முதலிய தேவச் சிரேட்டரும்
சார்பென யோக விசிட்டர்க ளான
சனந்தன ராகிய சாதுக் கணங்களும்
சீர்பெறு மங்களப் பொருள்களைத் தங்கள்
கைகளிற் கொண்டுமே கோயில்முன் குறுகினர்
மார்பில் திருவுடை வேங்கட நாதனே
வைகுண்ட னேபள்ளி எழுந்தரு ளாயே.

28

நித்தம் திருமகள் வாசம்செய் மார்பனே
நின்மல னேஏக நற்குண வாரியே
மெத்தப் பிறவிக் கடலைக் கடக்கவை
நிகரற்ற சேதுவாய் நிற்கும் நற்றுணையே
வித்தையாம் வேதாந்த ஞானங்கொண்ட றியவல்
வைபவங் கொண்டோனே அன்பர்க் கினியோனே
சக்தி மிகுத்திடும் வேங்கட நாதனே
சடுதியே நீபள்ளி எழுந்தரு ளாயே.

29

ஈடிலாத் திரு வேங்கட நாதனின்
இத்திருப் பள்ளி எழுச்சி தனைத்திளம்
பாடிப் பரவச பக்திகொண்டேநிதம்
பாரா யணமிடும் பக்தர் குழாமும்
நாடித் தினமு மனத்தில் நினைத்திடும்
நரர்களும் இங்கெலா நல்லறி வுற்றுமே
தேடிக் கிடைத்தற் கரியதாம் பரம்பொருள்
சீக்கிரம் கைகூடப் பெற்று மகிழ்வரே.

முற்றிற்று



III

ஸ்ரீ வெங்கடேச ஸ்தோத்திரம்

கோக நதப்பூ வாழ்வாள்
கொங்கைகீழ்க் குங்கு மத்தால்
மேகமாம் வண்ண மேனி
மிகச்சிவந் தொளிரு வோனே
லோகம் யாவைக்கும் மன்ன
மோகனக் கமலக் கண்ண
ஆகுக நில்பால் வெற்றி
அருந்திரு மலைவாழ் வோனே 1

அரனயன் சண்முக னேடே
அகிலமாம் தேவர் தங்கள்
சிரமிசை வைத்துப் போற்றும்
சீருடை மணியாம் தேவே
சரணென நாடி னோர்க்குத்
தண்ணருள் நிதியா வோனே
திருமலைத் தேவா என்னைச்
சீருடன் பாலிப் பாயே 2

எண்ணிலே அடங்கா தாயும்
எல்லையே யில்லா தேநான்
பண்ணிய பிழைகள் நூறும்
பறந்திடச் செய்வா யென்று
எண்ணியே நின்சரண் நாடி
இங்குநான் தஞ்ச மானேன்
விண்ணுயர் திருமலைத் தேவா
பிழைபொறுத் தருளு வாயே. 3

பொன்னெனும் திருமகள் நாதா
பொற்புடைத் திருமலை யானே
வன்னமாய் வேத மோதும்
மாண்புடைப் பரம்பொரு ளாவோய்

மன்னுயிர் வேண்டல் மேலாம்
　　வரந்தரு முதார சீலா
உன்னிலு மேலோ னுன
　　ஒருவனும் யானறி யேனே. 4

இன்னிய குழலோ சையாற்
　　கோபியர் கோடி சூழும்
மன்மதர் கோடி போன்ற
　　வண்ணனும் ஒவ்வோர் ஆயர்
கன்னியுங் களிக்கும் கண்ணு
　　கதிதரும் வாசு தேவா
உன்னிலும் மேலோ னுன
　　ஒருவனும் யானறி யேனே 5

மங்கள குணமே பூண்ட
　　தசரதன் மைந்த னுன
இங்கெவர்க் கீடிலா வில்லோன்
　　ரகுகுல தீர னுன
எங்கணும் நிறைந்த ராமா
　　செம்மகள் ரமிக்கு மார்பா
பொங்கிடு கருணை யானே
　　போற்றுவாய் வரங்கள் யீந்தே 6

சீருடைச் சீதா தேவி
　　திருக்கரம் பற்று வானை
பூரண மதியே போன்ற
　　பங்கஜ முகங்கொள் வானை
கோரவி ராக்கத ரென்னும்
　　கும்பிருட் கொளிபோல் வானை
சீரகு ராமனை நாடித்
　　திருவடி சரணடைந் தேனே 7

அழகிய முகங்கொள் வானும்
அருந்திரு வுளங்கொள் வானும்
தொழுபவர்க் கெளிய னான
சுகந்தரு ரகுகுல நாதன்
பழுதிலாப் பாணம் பூண்டோன்
பரிவுளத் தம்பிகள் கொண்டோன்
எழில்மிகு மிவனை யன்றி
எவரையுஞ் சரணடை யேனே 8

திருவேங் கடவ னன்றித்
தெய்வமே வேறிங் கில்லை;
திருவேங் கடனை நாளும்
சிந்தனை செய்தேன், செய்தேன்;
திருவேங் கடவா நீயே
திருவருள் புரிவாய், புரிவாய்;
திருவேங் கடவா வேண்டும்
திருவினை யீவாய் யீவாய்; 9

உன்னிரு பதுமப் பாதம்
உன்னியே தூரம் நின்று
உன்னரும் சன்னிதி வந்து
உருகியே சேவை செய்தேன்;
நின்னரும் இந்தச் சேவை
நித்திய சேவை யாக
மன்னவா வேங்கட நாதா
மதித்தெனை யாள்வாய் ஆள்வாய் 10

குறுகிய அறிவால் யானும்
குற்றம் பலவுஞ் செய்தேன்;
மறைபுகழ் வேங்கட வெற்பின்
மகுடமா மணியா வோனே
அறிவிலான் யானும் செய்த
அப்பெருங் குற்ற மெல்லாம்
பொறுத்தருள் இன்று நீயே
பொறுத்தருள் இன்று நீயே 11

IV

வேங்கடேச ப்ரபத்தி

இங்கெலா சகத்தின் ஈசன்
வேங்கடன் மார்பில் சாந்தம்
பொங்கிட வாழும் பூவை
புண்ணிய குணமே மிக்காள்
பங்கஜ மலர்கைக் கொண்டாள்
பங்கஜ மலர்வாழ் ஈசை
பங்கஜப் பாதம் என்றும்
பரிவுடன் சரணடைந் தேனே 1

கருணையுள் வேங்கட நாதா
கமலையின் கணவா என்றும்
அருணிறை ஈசா எல்லாம்
அறிந்திடும் தேவ தேவா
தருணமே வந்தெமை யாளும்
தலைவனே அடியேன் உன்றன்
சரணமே சரணம் என்றே
சரணமு மடைந்தேன் நானே 2

அருமண மலரால் அன்பர்
அருச்சனை புரிந்திட் டாலும்
திருவடி மணமே மிஞ்சும்
திருவேங் கடவா உன்றன்
இருசரண் புதுப்புது இன்பம்
எனக்கருள் செய்வ தாலே
சரணமே சரணம் என்றே
சரணமு மடைந்தேன் நானே 3

அருமையாய் மலர்ந்து அன்றே
அதிகமும் மலர வல்ல
பெருமணம் நிறைந்து வண்ணம்
பெருகிடு கமலந் தன்னை

திருவடிக் கொப்பாய்க் கூறல்
    சிறுமொழி திருமலை நாதா
சரணமே சரணம் என்றே
    சரணமு மடைந்தேன் நானே 4

பரம்பொருள் நீயே யென்று
    பகர்வதற் கறிகுறி யாக
அருந்தல ரேகையிற் சக்ரம்
    அமிர்த கலசம் சங்கம்
அருந்தரு கொடியும் வஜ்ரம்
    அம்புயம் குடையும் கொண்ட
பெருந்திரு வடியே என்றும்
    சரணமாய் சரணம் ஆனேன் 5

தாமிரத் தலத்தால் தோற்ற
    பதுமரா கங்கள் பூண்ட
தாள்மேல் ஒளியால் தோற்ற
    இந்திர நீலம் பூண்ட
கோமள நகத்தால் தோற்ற
    சந்திர காந்தம் பூண்ட
மாமலர்ச்ர சரணம் என்றும்
    சரணமே திருமலை யானே 6

பரிவொடு மச்சத் தோடும்
    பதுமையின் தளிர்க்கரத் தாலே
வருடியும் பின்னும் வாட்டம்
    மலிந்துமே காணு கின்ற
உருகிய மனத்தால் வாக்கால்
    உன்னெணு மென்மை கொண்ட
திருமலை நாதா உன்றன்
    திருவடி சரணம் நானே 7

திருமகள் புவிமக ளோடே
    சீருடன் அவர்கட் கொப்பாம்
அருமையாம் நீளா தேவி
    ஆகியோர் தளிரே போன்ற
கரமதின் சேர்க்கை யாலே
    கனக்கவே செம்மை சேர்ந்த
திருவடி சரண மானேன்
    திருமலை முடிவாழ் வோனே 8

அரனயன் ஆதிய தேவர்
    அநவர தமுமே போற்றித்
திருமுடி வணங்கும் போது
    சிரமணி மகுடக் கற்கள்
தருமொளி முளைகள் போல்நின்
    சரணவா ரத்தி செய்யும்
திருமலை நாதா வுன்றன்
    திருவடி சரண மானேன் 9

விட்டுணு பதம்பர மென்றே
    வேதமும் ஏத்திப் போற்றும்
திட்டமாய் மறைமுடி கூறும்
    திவ்விய பதமே மீண்டும்
கிட்டிடு மென்றே கையாற்
    சுட்டிநீ காட்டு மந்த
பட்டெனும் சரணம் தஞ்சம்
    பார்புகழ் திருமலை யானே 10

அருமையாய் அருச்சுன னுக்கே
    அரியதோர் சாரதி யாயென்
சரணமே அடைநீ யென்று
    சாற்றிய பின்னர் இங்கே

திருக்கர மதனுல் நீயும்
    திரும்பவும் எனக்குக் காட்டும்
திருவடி சரண மானேன்
    திருமலே முடிவாழ் வோனே 11

கருதியென் முடியின் மீதும்
  காளிங் கனின்முடி மீதும்
திருமறை முடியின் மீதும்
    திருமலே முடியின் மீதும்
உருகிய உள்ளத் துள்ளும்
    அடவிகள் மீதும் வைத்த
திருவடி சரண மானேன்
    திருமலே முடிவாழ் வோனே 12

மருவியுன் அடியில் தூவும்
    மலர்களும் வாடா தென்றும்
திருமலே முடிக்கு மாங்கே
    செம்மைசெய் அணிக ளாகும்
வருமடி யார்கள் கண்கள்
    உள்ளமுங் குளிரச் செய்யுன்
திருவடி சரண மானேன்
    திருமலே முடிவாழ் வோனே 13

அரனென வாகும் அன்பர்க்
    கருணிறை நின்சர ணங்கள்
கருணேயுள் தாயின் பாலேக்
    கனிந்துமே புசிக்கும் சேய்போல்
தருணமே வந்து போற்றி
    தஞ்சமாய் அணுகு மாபோல்
திருவேங் கடவா வுன்றன்
    திருவடி சரண மானேன் 14

தருமமாம் சிந்தையர் போற்றும்
    தாமரைச் சரணுடை நாதன்
அருமையா முனிமண வாளன்
    அப்பவ சாகரம் தாண்ட
ஒருவழி காட்டி மக்கள்
    உய்ந்திட வைக்கும் உள்றன்
திருவடி சரணம் ஆனேன்
    திருமலை முடிவாழ் வோனே 15

திருவேங் கடவா வுன்றன்
    திருவருள் கூட்டி வைப்பாள்
திருமகள் தானே யாகும்
    திருவடி பணிந்தேன் நானே
பரமாம் பதத்தை யானும்
    பருகிய பின்னர் உங்கள்
இருவரின் சேவை செய்தே
    இணையிலாச் சுகமுறு வேனே 16

V

வேங்கடேச மங்களா சாஸனம்

மங்கள மாநிதி; அன்பர்கள் மாநிதி
பங்கய மாதுக் குகந்ததோர் நாயகன்
எங்குறை தீர்க்கவல் வேங்கட நாதனும்
மங்கள மேசீனி வாசனும் தேவர்க்கே 1

பங்கய மாதுமே பார்த்து வியந்திடும்
செங்கண் அழகன் வளைந்த புருவத்தான்
இங்குல கங்கட்குக் கண்களே யாகுவோன்
மங்கள மேதிரு வேங்கட நாதர்க்கே 2

அங்கந்த வேங்கட மாமலை யுச்சிக்கு
மங்கள பூஷண மாம்சரண் கொண்டோன்
மங்களங் கட்கெலாம் மூல நிதியாவோன்
மங்கள மேதிரு வேங்கட நாதர்க்கே 3

அங்கங்க ளெல்லாம் அழகெனும் செல்வத்தால்
பொங்குதற் கண்டு களித்த வுளத்தினால்
இங்குள மாந்தர் மயங்கிடச் செய்வோனும்
மங்கள மேதிரு வேங்கட நாதர்க்கே 4

நித்திய மானவன், நிர்மல மானவன்
சத்திய மானவன், சர்வ வுளத்து ளோன்
சித்தின் சொரூபன் ஆனந்த ரூபனும்
நித்திய மங்களம் வேங்கட நாதர்க்கே. 5

இங்குச் சுயமாக எல்லா மறிந்தோனும்
இங்கெலாச் சக்தனும் எல்லோர்க்கு மீசனும்
மங்களச் சீலனும் அன்பர்க் கெளியோனும்
மங்கள மேதிரு வேங்கட நாநர்க்கே 6

ஏகப் பரம்பொருள் ஏவும் பரம்பொருள்
மோகம் பலவும் முடித்திடும் பூரணன்
லோகப் பரமாத்மா உண்மைப் பரத்தவன்
ஆகுமவ் வேங்கட நாதர்க்கே மங்களம் 7

என்றுங் களைப்பின்றி எக்காலும் சேவித்தும்
என்றுமே போதுமென் றெண்ணு வடியார்க்கு
நன்ரு யமிருத மாகித்திகழ் வோனும்
என்றுமுள் வேங்கட நாதர்க்கே மங்களம் 8

இந்தா சரணமென் றிங்குத் திருக்கையால்
வந்திடு மாந்தர்க்குத் தன்சீ ரடிகளை
அந்தமாய்க் காட்டுங் கருணை மிகுத்தோனும்
எந்தையாம் வேங்கட நாதர்க்கே மங்களம் 9

கருணை அமிருதமே ஆகும் நதியிலே
பெருகும் அலைபோற் குளிர்கடைக் கண்ணுற்
கருதி யுலகங் களிக்கச்செய் வோனும்
திருமலை வேங்கட நாதர்க்கே மங்களம் 10

அணியுமம் மாலைக்கும் ஆபரணங் கட்கும்
அணியுமவ் வாடைக்கும் ஆயுதங் கட்கும்
அணிதரு மூர்த்தியாம் ஆர்த்திகள் தீர்க்கும்
மணிமுடி வேங்கட நாதர்க்கே மங்களம் 11

...ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 14086
14100

VI

ஆதி சங்கரர் அருளிய பஜகோவிந்தம்

தமிழ் மொழி பெயர்ப்பு :

காமாக்ஷி தாஸர்

கோவிந்த கோவிந்த கோவிந்தா என்றே
கோவிந்த னைப்பரடு ஏமூட னேநீ
ஆவி பிரிந்துமே போகுமந் நாளினிற்
காவாது காவா திலக்கணக் கல்வியே 1

மனத்தினிற் பற்றைத் தவிர்த்திடு மூடனே
மனத்தினிற் பற்றறச் சத்தியத் துற்றிடு
முனமேநீ செய்த வினையால் விளைந்திட்ட
தனமதே போதுமென் றேயிருப் பாயே 2

பெண்களின் நாபிப் பெருத்த தனங்களைக்
கண்டு மயங்கி யவைக்கிரை யாகாதே
கண்டுநீ மோகமே கொண்டது மாமிசப்
பிண்டமென் றேயெண்ணு எண்ணு மனமே 3

தாமரை மீதுற்ற தண்ணீர்த் துளிபோல்
ஆமிந்த வாழ்வு திலையற்ற தென்றறி
தீமையாம் பற்றுடன் ரோகமு மோகமு
மேமிகக் கொண்டதே லோகத்தில் முற்றுமே 4

தேகத்திற் பொன்தேட வல்லமை யுள்வரை
மோகங்கொள் வாருன்மேல் உன்னுற வோரெலாம்
தேகம் கிழமாகி வல்லமை போய்விடில்
லோகத்தில் உன்னோடு பேசவும் மாட்டாரே 5

மூச்சு உளவரை வீட்டிலுன் க்ஷேமத்தின்
பேச்சு நிலவிடும் ஆனலத் தேகத்தில்
மூச்சுமே போயிங்கு தேகமும் க்ஷீணமாய்
போச்சென்றால் அச்சங்கொள் வாள்மனை யாளுமே. 6

பாலப் பருவத்திந் பற்றும் விளையாட்டில்
வாலிபம் வந்திடில் வண்ணப்பெண் மோகமாம்
காலத்தி லேகிழ மாகிற் கவலையாம்
கோலப் பிரமத்திற் பற்றுளா ரில்லையே 7

இங்குன் மனைவியார்? நீயாருன் சேயுமார்?
இங்குநீ யாராலே எங்கிருந் தேவந்தாய்?
இங்கிச் சமுசாரம் விந்தையில் விந்தையே
நன்கிந்த தத்வத்தைச் சிந்திப்பாய் சோதரா 8

சத்துக்கள் சங்கத்தால் சாலவே பற்றுப்போம்
பத்துமத் துப்போகிற் பாரில்மோ கம்போகும்
அத்துப்போ கில்மோகம் நித்திய தத்வமாம்
நித்திய தத்வத்தால் இம்மையில் முக்தியே 9

மெத்த வயதாகிற் காமமிங் கேதிலை
வத்திநீர் போய்விட்டால் ஏரிதா னிங்கேது
அத்தங் குறைந்திடில் ஏது பரிவாரம்
தத்துவங் கண்டபின் நீங்கும்சம் சாரமே 10

வாலிப மோடு தனச்செருக் கெல்லாமே
காலம் கவர்நிதிடுங் கண்ணிமைப் போதினில்
ஞாலத்தி லீதெலாம் மாயையே என்றுநீ
சாலத் தெளித்துமே சார்வாய் பிரமத்தே 11

காலையு மாலையு மந்தி பகற்கார்
காலமும் வேனிலு மாறிமாறி யேவரும்
காலம் விளையாடி வாழ்வைச் சுருக்கிட்
டாலும்நீ ஆசையை விட்டபா டில்லையே 12

யாதும் விதித்தோ னிருக்கையில் மூடனே
வேதனை கொள்ளாதே செல்வம் மனைவிபால்
மேதி னியிற் பவ சாகரம் தாண்டவே
சாதுக்கள் சங்கமே ஓடமு மாகுமே 13

சடையுளோர் மொட்டை முடியைப் பிடுங்குவோர்
இடையினிற் காவியு டுத்தித் திரிபவர்
மடையரே எல்லா மறிந்து மறிவிலார்
இடும்வேட மெல்லாம் வயிறு வளர்க்கவே 14

காயம் தளர்ந்தது ரோமம் நரைத்தது
வாயிலே பல்லெல்லாம் போய்வய தாயிற்று
சாயவேகோல் கொண்டு போகும் கிழமானுன்
ஆயினும் ஆசைக்கோர் பொக்கிஷம் ஆவனே 15

முன்னமவ் வக்கினி பின்னமவ் வாதித்தன்
முன்முழந் தாளிலி ராவில்மோ வாயுளான்
தன்கையாற் பிச்சை கொண்டுமரம் கீமுளான்
என்னிலும் ஆசையிற் கட்டுண் டுழல்வனே 16

அம்மகா கங்கையின் சங்கமும் எகுவான்
செம்மை விரதமும் தானமும் செய்குவான்
எம்மதம் தன்னிலும் ஞானமில் லாதவன்
சன்மம்நூ ருனுலுஞ் சாயுஜ்யம் அடையானே 17

கோலமாய் மான்தோ லுடுத்துத் தரையினில்
ஆலயம் தன்னில் மரத்தடி தூங்குவான்
சாலப் பொருளாசை போகம் துறந்தவன்
மேலான ஆனந்தம் பெற்றுத் திகழ்வனே 18

மோகத்தில் மூழ்கினும் யோகத்தில் மூழ்கினும்
ஏகத்தில் மூழ்கினும் சங்கத்தில் மூழ்கினும்
ஏகப் பரத்தினிற் பற்றுடை யானுக்கே
ஆகுமா னந்தமா னந்தமா னந்தமே 19

கோலமாய்க் கீதையைக் கொஞ்சம் படித்தாலும்
சாலவே கங்கைநீர் சற்றுப் பருகினும்
மாலாய் முராரியென் ருெருதரம் சொன்னுலும்
காலனிடம் சர்ச்சை யவருக்கிங் கில்லையே 20

இன்னும் பிறப்பது இன்னும் இறப்பது
பின்னமும் தாயின் கருவிற் கிடப்பதும்
துன்பப் பவக்கடல் தாண்டற் கரியதாம்
உன்கருணை யாலெனைக் காவாய் முராரியே 21

சாலையிற் கந்தலை தைத்துத் தரிப்பவன்
கோலமாய்ப் புண்ணியம் பாபம் கடந்தவன்
சீலத்துடன் சித்தம் யோகத்தில் வைத்தவன்
பாலன்போல் உன்மத்தன் போலும் ரமிப்பனே 22

நீயாரோ நானுரே எங்கிருந் தோவந்தேன்
தாய்தந்தை யாரெனச் சாலவி சாரித்து
லாயா லுறைக்க வோர் காரணமில்லாத
மாயா வுலகிது கனவெனக் கொள்வாயே 23

என்னிலு முன்னிலும் மெய்ப்பொருள் தன்னிலும்
மின்னும் பொருளென்றும் ஒன்றே எனவறி
என்னிடம் வீண்கோபம் கொள்ளாது சிந்தையில்
என்றும் சமத்துவத் தாற்பதம் விரைகுமே. 24

சத்துரு மித்திரன் புத்திரன் உற்ருரை
பத்திடவோ மற்றும் பகைத்திட வெண்ணுதே
நித்திய ஆத்மாவை ஏங்கெங்கும் பார்த்துநீ
புத்தியிற் பேதத்தை நீக்கி யெறிவாயே 25

தவிர்த்திட்டுக் காமமும் மோகமும் முற்றுமே
''அவனே நான்'' என்பவன் ஆத்தும ஞானிதான்
'அவனேநான் என்றிடும் ஞான மிலாதவன்
தவிப்பன் நரகத்தில் வேதனை யுற்றுமே 26

செப்புவாய் கீதையும் ஆயிரம் நாமமும்
எப்போதும் எண்ணுவாய் இலக்குமி நாதனை
தப்பாமல் நாடுவாய் சாதுக்கள் சங்கமே
அப்பொருள் வேண்டுவோர்க் களிப்பாய் தனத்தையே 27

சிற்றின்பம் தன்னிலே ஈடுபட் டேபிணி
யுற்றுத்தே கத்தில் தவித்து போகத்தில்
மற்றும் பிறப்பது நிச்சய மென்ருலும்
பற்றியே பாபத்தைச் செய்கின்ரு னந்தகோ 28

செல்வத்தாற் றுன்பமே சேருமென் றெண்ணுவாய்
செல்லத்தா லின்பமே யில்லையென் றெண்ணுவாய்
செல்வத்தாற் சேயிட மும்பய யாகுமே
செல்வத்தின் போக்கிது வாகுமே எங்குமே 29

மெத்தப் ராணுயாம ப்ரத்யா காரமும்
நித்யா நித்யவி வேகச் சமாதியும்
நித்யம் சபநிதித்யா சன மதுவும்
மெத்தச் சிறத்தையாய்ச் செய்திடல் வேண்டும் 30

அந்தமாய்ச் சற்குரு வின்சர ணனநீ
இந்தச் சமுசாரம் சீக்கிரம் தாண்டிநீ
ஐந்து புலன்கள் மனமு மடக்கிநீ
சிந்தையில் வாழுமத் தேவனைக் காண்பையே. 31

VII

திருப்பதித் திருப்புகழ் வரவு

1

மோகனம் / கானடா] [ஆதி

நாரா யணதிரு நாரா யணஹரி
நாரா யணவென தினமானம்
நாரா யண சபமேதா ரகமென
நாவா ரநிதமு முறையோடே
பாரா யணமிடு மேலா மடியர்கள்
பார்மீ திகபர சுகமோடே
பாரோர் புகழ்தரு வாழ்வோ டருணிறை
வாடா கதிபெற அருள்வோனே
வாரா யுனதருள் தாரா யெனநிதம்
மாலா யுனதடி யிணைநாடி
வாடா தமிழ்மொழி யாலே துதிசெய்து
வாரே னெனதுமுன் வரவேணும்
சீரா யலைமகள் மார்போ டுறையவும்
மேலாம் நிதியருள் புரிவோனே
தீரா வினைகளை வோனே திருமலை
மீதே மருவிய பெருமாளே.

2

மோகனம் / கானடா] முந்து தமிழ் மாலை — மெட்டு [ஆதி

அருணர் சதகோடி கோடிக் கோடி
உதய மெனவீசு ஜோதிப் பாதம்
அநுதி னமுநாடி பாடிப் பாடி களிகூரும்
அடியர் வினைசாடு நேயக் கார
செகமு ழுதுமீயு மாயக் கார
அதிச யவநேக லீலைக் கார கடல்போலே

கருணை மிகுமோக ரூபக் கார
புவிம களளாவு போகக் கார
கமல மலர்மாது மோகக் கார பரமான

கதித ருசகாய வேளைக் கார
வினைய றுமநேக சாலக் கார
கருது மடியார்கள் வாரக் கார புவிமீதே

திரண மெனநோய்கள் தீரச் சேவை
புரியு முபகார காவற் கார
திருத ருமுதார சீலக் கார ஒருகாலே

தெரிச னமதால நேகக் கோடி
வினைய றுவதான பார்வைக் கார
திரும லையுலாவு மாண்மைக் காரப் பெருமாளே

சரண மெனநாடு வேணைத் தேடி
வெருக ருணையோட ளாவிக் கூடி
சகல வினைதீர வேவைத் தாளும் எழிலோடே

சகல கலைமேவு ஞானத் தோடும்
நிதியு டனும்வாழ வேயிச் சேயை
சடுதி யெனவாள வேயிப் போது வருவாயே.

3

காம்போதி] [சாபு

தருமநெறி வழுவாது தினமுமுன தருள்நாடி
சரணெனவு னடிபேணும் அடியார்கள்
சபையினுற வதுநாடி பெருமையொடு [புகழ்பாடி
சகலவகை யிலும்நாடும் ஏளியேனின்
இருவினைமு மலமோட மழவினையு முடனோட
இடர்கலிகள் பிணியோட அருள்கூட
இகபரமு மெளியேனை மருவியுன தருள்சேர
எனதுமுன மிதுவேளை வருவாயே;

தருமனுட னொருவீமன் விசயனொடு சகதேவன்
நகுலனிவர் சதியான ஒருதேவி
சபைநடுவி லவமான முறுமளவி லுடனோடி
தருணமதி லுடைநீள அருள்வோனே;
திருமகளை மணிமார்பி லணியுமொரு திருமாயன்
செகமுழுது மருள்நாதன் மதுசூதன்
திருமலையின் முடிமீது வரமருளு மெழிலோடு
தெரிசனமு மருள்தேவர் பெருமானே.

4

அருச்சனை

செஞ்சுருட்டி/ரூபம்] [ஆதி

ஆதி யந்தமி லானே நமோநம
வேத அந்தமு ளானே நமோநம
ஆன வந்தபி ரானே நமோநம அரிதான

ஆக மம்புகழ் பாதா நமோநம
ராம மந்திர ரூபா நமோநம
ஆயர் மங்கையர் வாழ்வே நமோநம அதிமோக

சூத லம்புகழ் ஜோதீ நமோநம
தூய மங்கள ரூபா நமோநம
பூம டந்தையின் நாதா நமோநம ஜகமீதே

போக முந்தரு சீலா நமோநம
யோக முற்தரு மூலா நமோநம
பூதி தந்தருள் நாதா நமோநம அருள்தாராய்

வேத மந்திர நாரா யணவென
பால னுஞ்சொல வேசீறியே விழும்
வீண னங்குட னேமா ளவேயருள் அரிரூபா

வேழ மன்ஞெரு நாளோ லமேயிட
ஆழி கொண்டுட னேயேகி யேயருள்
வீர மங்கள நாரா யணதிரு அணிமார்பா;

வேத மிங்கொரு சீரா னமாமலை
ரூப முங்கொள வேநா டியேபடி
மீது நின்றது போலா குமோர்திரு மலைமீதே

மேன்மை கொண்டடி யார்வா ழவேநினை
வோடு நின்றவர் மாநோய் களோடவை
வீறு கொண்டதி சீரா கவேயுறை பெருமாளே.

5

தீபாராதனை

சாமா] [சாபு

தீப மங்கள ஆரதி திரு
வேங்கடர்க்கே காட்டினோம்
ஜோதி மங்கள ஆரதி மது
சூதனர்க்கே காட்டினோம்;
கோல கற்பூர ஹாரதி எங்கள்
கோவிந்தர்க்கே காட்டினோம்
நாளு மங்கள ஆரதி எங்கள்
நாரணர்க்கே காட்டினோம்
மாண்பு டன்திரு ஆரதி எங்கள்
மாதவர்க்கே காட்டினோம்
க்ஷேம முந்தரு ஆரதி எங்கள்
சீதார்க்கே காட்டினோம்
சோபை மிஞ்சிய ஆரதி எங்கள்
கேசவர்க்கே காட்டினோம்
ராஜ மங்கள ஆரதி எங்கள்
ராமனுக்கே காட்டினோம்
பக்தி மிஞ்சிய ஆரதி கோ
பாலனுக்கே காட்டினோம்
வாழ்வு தந்திடும் ஆரதி சீனி
வாசனுக்கே காட்டினோம்
வேத மந்திர ஆரதி திரு
வேங்கடர்க்கே காட்டினோம்
மங்களம் சுப மங்க ளம்
ஜய மங்களம் தரு ஆரதி
எங்கள் வெம்பிணி தீரவும் சுபமங்களம்
பெறக் காட்டினோம்.

6

அருள் வேண்டல்

பூபாளம்] [ஆதி

கருணை வாரிதி யென் றெரு மங்கள
மதன மோகன சுந்தர னிங்கித
கமல மாதுநி றைந்து வளம்பெறு திருமார்பா

கமல மாமுக சந்திர மண்டலம்
அதனி லேயரு ணின்று ததும்பிய
கமல லோசன னென்றுவி ளங்கிடு மதுசூதன்

அருணர் கோடியெ ழுந்ததெ னும்படி
சரண வாரிஜ முந்திகழ் புங்கவன்
அகில லோகமு வந்துத ருந்திரு வருள்நாதன்

அருள்வி லாசனு மங்கள னுந்திரு
முகவி லாசனு மெங்கும் நிறைந்தருள்
அமல் மாதவன் அந்தமி குந்திடு மணிமார்பன்

வருணன் வாயுவு மிந்திர னந்தகன்
உயர்கு பேரனு மங்கொரு செஞ்சுடர்
நிருதி யீசனு மென்றெளி ரெண்டிசை அதிபோரும்

வரமு மேபெற வந்துவ ணங்கிடு
மகிமை பூணும ரங்கன ருந்திரு
மலையி லேயருள் பொங்கவெழுந்தருள் பெருமானே

சரண மேகதி யென்றுதி னந்தினம்
அருண வாரிஜ செஞ்சர ணம்புகழ்
தமிய னேனுல கந்தனி லின்புற வுளமேவி

சகல மாவினை சிந்திட வென்கொடு
மிடியு மோடிட செம்பத மும்பெற
தருண மே நிதி யும்பெற வந்தருள் புரிவாயே.

7

மத்யமாவதி/கல்யாணி]   இமராஜ நிலா—மெட்டு   [மிஸ்ர சாபை

பிறவாழி யிவேழைக டக்கும் படியான
பெருஞான மிநாளி ஃலளித்தென் றணையாள்வாய்
மறவாது ஊநாளும் நினைத்துன் புகழ்பாடி
மகிழ்வாய்வி னையாவு மொழித்திங்கொளிர்வேனே?
இறவாதொ ருவாழ்வை யளிக்குங் குருநாதா
எனதாரு யிராக விருக்குஞ் ஜகதீசா
சிறுவாழ்வு வராது தவிர்க்கும் பெரியோனே
திருமாம லைமீது சிறக்கும் பெருமானே.

8

விஜயஸ்ரீ]   வரதாமணி — மெட்டு   [திரிபுடை

சரணு கதிநீ யெனவோரில்
தலமீ தெதுதான் வருகாதோ!
முரணு மொருவாழ் வடையாதே
முனிவோ னெனவே திகழ்வோனே
கருணு கரனே பெரியோனே
கமலாள் அணிமா திருமார்பா
அருணே தயம்நேர் இருபாத
அருள்சேர் திருமா மலையோனே.

9

தன்யாசி]   இரவுபகற் — மெட்டு   [சாபு

இகபரநற் றுணையாகி
எளியனிடத் துறவாகி
சுகமிகுநற் பெருவாழ்வைத்
துயரகலத் தருவாயே;
அகமகிழத் திருமார்பில்
அலைமகளைப் புனைவோனே
செகமதனிற் புகழ்வான
திருமலையிற் பெருமானே.

10

அட்டாறு] எந்தந் திசையிறு — மெட்டு [ஆதி

இந்தத் தரணியி லெனதுட லதுகொடு
    இந்தக் கொடுமன மொடுகொடு மொழிகொடு
    எந்தப் பிழையது புரியினு மவையுன தருளாலே

இருச் சமனமு முறுமவை முழுவது
    முந்திப் பிழைகளு மிடர்களு மறுமென
    இங்குச் சுருதியு முனிவரு முறைதரு வதனுலே

சந்தித் தரிஹரி நரஹரி முரகரி
    அந்தத் திருமலை யதிபதி ரகுபதி
    தங்கத் திருமக ளதிபதி யருணிதி எனநாளும்

சந்தத் தொடுபுக ழடிமையின் வினையற
    தொந்தப் பிணியற மிடியற அருணிறை
    சம்பத் துடனிரு நிலமிசை ஒளிரவும் அருள்வாயே;

சிந்தித் திடுமவர் கொடுவினை சுளுமற
    அந்தக் கணமதிலருட்ரு மகிமை கொள்
    சிந்தைக் குகைதனி லிருளறு மணியென வருவோனே

சிந்தைக் கினியவள் திருமகள் புவிமகள்
    அந்தத் துடனிரு புறமரு விடுமிரு
    செம்பொற் பதமருள் கலியுக வரதனு மெனுமீச

அந்தத் தருமணி பசுவென வருமகள்
    வந்தித் திடுமவர் வறுமைக ளறுமகள்
    அன்பர்க் கெளியவள் திருமகள் உலவிய திருமார்பா;

அன்புக் கடலெண வருமடி யவர்வினை
    சிந்தத் திருவுள முடையவன் நெடியவன்
.. அந்தத் துடனொரு திருமலை மருவிய பெருமானே.

11

அட்டாணு]   ஒரு பொழுது — மெட்டு   [சம்பை

ஒருபொழுது முனைமனதி லேவைத் தோதிப் புகழேனே
உனதுதிரு மலையதனை மேவிச் சேவித் தறியேனே
இருபதமு நறுமலர்கள் தூவிப் பூசித் தறியேனே
இனியுனது திருவருளு மேவச் சீரைப் பெறுவேனோ?
பெருபுவியில் உளமதனில் மாசற் றோருக் கருள்வோனே
பிறவியலை யகலவிடு மோடக் காரப் பெருமானே
அருவெனவு முருவெனவு மாகித் தாஸர்க் கருள்வோனே
அருளுடைய் திருமலையின் மீதிற் ஜோதிப் பெருமாளே.

12

மத்யமாவதி]   மனமெனும் — மெட்டு   [ஆதி

மதிக்கு நாயக மலர்மகள் நாயக
புவிக்கு நாயக புவிமகள் நாயக
மறைக்கு நாயக திருமலை நாயக அறம்யாவும்

வளர்க்கு நாயக வரமருள் நாயக
சுரர்க்கு நாயக சுகமருள் நாயக
வழிக்கு நாயக இகபர நாயக பரஞான

கதிக்கு நாயக கருவறு நாயக
விதிக்கு நாயக வினையறு நாயக
கவிக்கு நாயக அடியர்கள் நாயக பலவான

கலைக்கு நாயக குலமதின் நாயக
நிலைக்கு நாயக நினைவதன் நாயக
கருத்த மேனியன் மணிதரு தேனுவுமெனவாம்பல்

நிதிக்கு நாயக னடியவர் கோரிய
தளிக்கு நாயக னவர்வினை தீரவும்
நினைக்கு நாயக தனதென வேயவர் பணியாவும்

நிகழ்த்து நாயக பலவகை யாகிய
தவத்தின் நாயக தருணம தேதுணை
யிருக்கு நாயக வரத மனோகர பெருமாளே

பதிக்கு ளேயருள் மிருமலை யானுனை
அடுத்த யேழையி னிடர்பிணி யோடிட
பதத்தி லேயுறை மதியொடு கூடியு னருளாலே

படிக்கு ளேயெனை யுனதடி பாடவும்
இகத்தி லேநிதி பலவுடன் வாழ்வுற
பரத்தி லேயுன தடியிணை சேரவும் அருள்வாயே.

13

கல்யாணி] இமராஜ நிலா — மெட்டு [மிஸ்ர ஜம்பை

இருளாம்பிற வாழிக டக்கும் பெருஞானம்
எளிதாம்படி யாக வுரைக்குங் குருநாதா
பரமாம்பெரு ஞான மளித்தும் புவிமீதே
பவிசாம்படி தேறிய பக்தர்க் கருள்வோனே
சானும்புய மேயுளம் வைத்துன் புகழோதி
தனமாம்படி சீர்பெல வைத்தென் றணையாள்வாய்
திருவேந்திய மார்பு சிறக்கும் பெரியோனே
திருவேங்கட மாமலை நிற்கும் பெருமாளே.

14

மாளவி] ஒங்குமைம்புல — மெட்டு [ஆதி

ஏங்கி யிங்குழல் வாழ்வை யொதுக்கும் படிஞானம்
ஈந்து வந்தெனை யாள நினைத்துன் பதமீதே
ஓங்கு மன்புடை யோர்கள் துதிக்கும் புகழோனே
ஓங்கி நின்புக ழோதி சிறக்கும் படியாள்வாய்
தாங்கி யன்பர்கள் நோய்கள் தவிர்க்கும் பெருமாளே
தாங்கு மம்புய பாத மவர்க்கிங் கருள்வோனே
வேங்க டம்பதி மீது சிறக்கும் பெருமாளே
வேண்டு மென்பதை நாடு வலர்க்கிங்கருள்வோனே.

15

செஞ்சுருட்டி] பரிமளகளப — மெட்டு [ஆதி

திருவடி சரணென சந்தங் கொண்டும் புகழ்வோரை
செகமதி லெழிலுற பண்புந் தெம்புந் தருநாதா
அருமறை புகழ்தரு செம்பொன் தங்கும் பதமோதும்
அடியர்க ளுளமிசை என்றுந் தங்கும் குருநாதா
திருமக ளருளுட னின்பம் பொங்குந் திருமார்பா
செகமகள் ஒயிலொடு தங்கும் பண்பும் பெறுநாதா
திருமலே தனிலரு ளென்றும் பொங்கும் புகழோனே
ஜெயஜெய ஹரிஹரி எங்குந் தங்கும் பெருமாளே

VIII

பார்த்தசாரதிப் பஞ்சரத்னம்

பார்த்த சாரதியே போற்றி
பார்புகழ் கண்ண போற்றி
ஆர்த்திகள் யாவுந் தீர்க்கும்
அண்ணலே போற்றி போற்றி
சீர்த்திசேர் திருவை மார்பிற்
சேர்த்தருள் தேவே போற்றி
பூர்த்தியாய்ப் பவவினை போக்கும்
புண்ணியா போற்றி போற்றி. 1

காத்தருள் கண்ண வென்று
கலங்கிய மாதுக் கந்நாள்
நேர்த்தியாய் மிகவுஞ் சீலே
நீளவே யருளிச் செய்த
கீர்த்தியே பூத்த சீலா
கேசவா மானங்காக்கும்
மூர்த்தியே முதலே போற்றி
முக்திக்கு வித்தே போற்றி, 2

கருணையே உருவாய் வந்த
கற்பகத் தருவே போற்றி
தருணமே அடியார் கட்டந்
தவிர்த்தருள் கண்ணா போற்றி
அருணனே போன்றெம் மிருளை
அகற்றிடு மரசே போற்றி
சரணமே கதியென் றோரைத்
தாங்குவாய் போற்றி, போற்றி. 3

நாயினுங் கடையோம் நாங்கள்
ஞானமும் நலமும் அறியோம்
ஆயினும் வாயால் வாழ்த்தி
அண்டினோம் நின்னருள் நாடித்
தாயொடு தந்தையு மாகித்
தாங்கிட நீயே மறுக்கிற்
சேயெமக் கார்துணை செப்பாய்
திருவளர் மார் பினானே. 4

அஞ்சிய விசயன் நெஞ்சம்
ஆறிடக் கீதை பகர்ந்தோய்
நெஞ்சொடு காயம் வாக்கும்
நிமலமாய் ஆக்கி நாங்கள்
செஞ்சரண் தஞ்சம் என்றே
சேவையுஞ் செய்தே நின்றோம்
அஞ்சலென் றபயந் தந்தே
ஆட்கொள வருவா யின்றே 5

IX

போற்றிப் பஞ்சகம்

1

வேங்கட மாமலை வாழும்
　　விண்ணவர் பெருமான் போற்றி
ஏங்கிடு மடியார் பாலே
　　இரங்கிடு மண்ணல் போற்றி
தாங்கியென் குடியைக் காந்குந்
　　தண்ணருள் சீலா போற்றி
பாங்கொடு திருவை மார்பிற்
　　பதித்தவா போற்றி போற்றி.

2

அருமறை நாலும் போற்றும்
　　அருணிறைப் பாதா போற்றி
இருமையு மேழையர் பாலே
　　இருந்தருள் நாதா போற்றி
பெருமையாய்த் திருமகள் மார்பிற்
　　பேணியே வைத்தாய் போற்றி
திருமலை மீதே வாழும்
　　திவ்விய தேவா போற்றி

3

இருவினை போக்கி யெங்கள்
　　இடர்பிணி தீர்ப்பாய் போற்றி
வருவினை நீக்கி யெங்கள்
　　வறுமைகள் தீர்ப்பாய் போற்றி

தருவென ஈவாய் போற்றி
தருணமே காப்பாய் போற்றி
திருவினை மார்பிற் பூண்ட
திருமலை யானே போற்றி

4

திருமகள் நாதா போற்றி
செகம்புகழ் பாதா போற்றி
தருமணி பசுவு மாகித்
தாசரைச் காப்பாய் போற்றி
பெருமையா யுலக மெல்லாம்
பேணு கோவிந்தா போற்றி
திருமலை நாதா போற்றி
தேவர்கள் தேவா போற்றி

5

கருணையாம் கடலே யாகுங்
கார்முகில் வண்ணா போற்றி
அருணனே போன்றெம் மிருளை
அகற்றிடு மண்ணல் போற்றி
தருணமே அடியார் கட்டந்
தவிர்த்தருள் கண்ணா போற்றி
சரணமே கதியென் றோரைத்
தாங்குவாய் போற்றி போற்றி

★★

X

வாழ்த்துப் பஞ்சகம்

1

வேங்கட மாபலே வாழும்
    விண்ணவர் கோமான் வாழ்க;
ஏங்கிடு மடியார்க் கென்றும்
    இரங்கிடு மண்ணல் வாழ்க
பாங்கொடு திருவைக் கொண்ட
    பரந்தமார் புடையோன் வாழ்க
ஓங்கிய கருணை யாலே
    உலகினைக் காப்போன் வாழ்க

2

கோவிந்த ளுகி யிங்கு
    குணங்களின் குன்ருய் நின்ற
மாவிந்தை மலையோன வாழ்க
    மன்னெனு மாலோன் வாழ்க
கூவுந் தருணமே யானைக்
    குதவிய மாயன் வாழ்க
மேவும டியார்க் கென்றும்
    மேன்மைகள் தருவோன் வாழ்க

3

அருணஞேர் கோடி போன்ற
    அருணிறைப் பாதம் வாழ்க
கருணையே நிரம்பி நிற்குங்
    கண்களின் சீலம் வாழ்க

தருணமே வந்து காக்கும்
　　தயைமிகு மபயம் வாழ்க
சரணமே கதியெனக் காட்டும்
　　வரந்தரு கரமும் வாழ்க

4

மறைகளுங் காணு மாண்பன்
　　மன்னென வுவகைக் காக்குட
குறைகளைந் தருளும் எங்கள்
　　கோவிந்த ராஜன் வாழ்க
முறையிடும் பக்தர்க் காங்கே
　　முனைந்தவர் பிணிகள் தீர்க்கும்
நிறைவுள திருவுளங் கொண்ட
　　நெடியமால் வாழ்க வாழ்க

5

இணையடி நாளும் போற்றும்
　　ஈடிலாப் பக்தர்க் காங்கே
மணியொடு மந்திர மாகி
　　மருந்துமங் கலனே யாகி
பிணியெலாந் தீர்த்துச் செல்வம்
　　பெருக்குமப் பெருமாள் பாதம்
பணியுமப் பெரியோ ரெல்லாம்
　　பாரினிற் சிறந்தே வாழ்க

திருப்புகழ் பாராயண பலன்

அருளே யுருவாய் எழுமா மலைமீ தமர்ந்திடுமோர்
திருவேங் கடத்தன் திருப்புக ழென்றும் இசைத்தவர்கள்
திருவே நிறைந்து பரஞா னமுமாய் செகம்புகழும்
பெருவாழ் வுடனழியாநற் பதம் பெற்றிடுவாரே

KOVILOOR ANDAVAR
A. No. 14960

அருட்கவிமணி

காமாக்ஷி தாஸர்

இயற்றிய இதர நூல்கள்

1. காமாக்ஷித் திருப்புகழ்
(600 பக்கங்கள்) 4-ம் பதிப்பு (அச்சில்)

2. வள்ளி மணவெண்பா (அச்சில்)

3. வடவேரகத் திருப்புகழ்

4. வடபழநித் திருப்புகழ் (அச்சில்)

5. ஈசாவாஸ்ய உபநிடதம் உரை
(ஆங்கிலம்)

6. மாண்டுக்ய உபநிடதம் (ஆங்கிலம்) (அச்சில்)

7. That, This and Thou (அச்சில்)

8. ஆங்கில பகவத் கீதை

9. தமிழ் பகவத் கீதை

இந்த நூல் கிடைக்குமிடம் :

R. கல்யாண ராமன் M. A.
54, அடஞ்சான் தெரு, மந்தைவெளி,
சென்னை - 28

காமாக்ஷி தாஸர்
R. சோமசுந்தரம் அய்யர், அட்வகேட்
34, அருண்டேல் தெரு, மயிலாப்பூர்,
சென்னை - 4

This book has been published for

FREE

distribution to the Devotees of

LORD VEKATESHWARA

with the humble

contribution

from

JAYA
KAUSALYA
SEENA

ஆர்ஜி பிரிண்டர்ஸ், சென்னை-4 போன் 74484